**ஜூலை – 02**

# TNPSC துளிகள்

- இந்தியாவின் அதிவேக இரயில் வலையமைப்பை விரிவுபடுத்துவதற்காக ஏழு புதிய அதிவேக இரயில் வழித்தடங்களை அமைக்க அரசாங்கம் முன்மொழிந்துள்ளது.
    - முன்மொழியப்பட்ட வழித்தடங்கள் மும்பை-புனே, புனே-ஹைதராபாத், ஹைதராபாத்-பெங்களூரு, ஹைதராபாத்-சென்னை, பெங்களூரு-சென்னை, டெல்லி-வாரணாசி மற்றும் வாரணாசி-சிலிகுரி ஆகியவையாகும்.
- உதய்பூர் விமான நிலையத்தில் GAGAN (GPS உதவியுடனான புவிசார் விரிவாக்கப்பட்ட வழிகாட்டுதல்) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, இந்தியா தனது முதல் செயற்கைக் கோள் அடிப்படையிலான ஜெட் விமானத் தரையிறக்கத்தை மிக வெற்றிகரமாக மேற் கொண்டது.
    - ககன் (GAGAN) என்பது இந்தியாவின் செயற்கைக்கோள் அடிப்படையிலான மேம்படுத்தப் பட்ட அமைப்பாகும் (SBAS) என்பதுடன் இது உலகளாவிய நிலைப் பாடு அமைப்பின் (GPS) வழி செலுத்தல் துல்லியத்தை மேம்படுத்தச் செய்வதற்காக, இஸ்ரோ (ISRO) மற்றும் இந்திய விமான நிலைய ஆணையம் (AAI) ஆகியவற்றால் கூட்டாக உருவாக்கப்பட்டது.
- சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் கீழ் 2026 ஆம் ஆண்டு ஜூன் 17 முதல் 26 ஆம் தேதி வரை இந்தியா முழுவதும் நஷா முக்த் பாரத் சப்தாஹக் (போதைப் பொருள் இல்லாத இந்தியா வாரம் 2026) அனுசரிக்கப்பட்டது.
    - விழிப்புணர்வு, ஆலோசனை மற்றும் சமுதாய அணுகுமுறை மூலம் போதைப் பொருள் தேவையைக் குறைப்பதற்காக, 2020 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட நஷா முக்த் பாரத் அபியான் (போதைப்பொருள் இல்லாத இந்தியா இயக்கம்) திட்டத்தின் கீழ் இது ஏற்பாடு செய்யப்பட்டது.
- 2026 ஆம் ஆண்டிற்கான ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) மகளிர் மன்றம், கிர்கிஸ் குடியரசின் பிஷ்கெக் நகரில் நடைபெற்றது என்பதோடு இதில் SCO உறுப்பு நாடுகள் பெண்களின் தலைமைத்துவம், பாலினச் சமத்துவம் மற்றும் சமூகப் பொருளாதாரப் பங்கேற்பு குறித்து விவாதித்தன.
- தங்களது காப்பீட்டுக் கொள்கைகளை மதிப்பாய்வு செய்து புதுப்பிக்க மக்களை ஊக்குவிப்பதற்காக, ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 28 அன்று தேசிய காப்பீட்டு விழிப்புணர்வு தினம் அனுசரிக்கப்படுகிறது.
- ஒவ்வாமை நோய்கள் மற்றும் அவற்றின் தடுப்பு, நோயறிதல் மற்றும் மேலாண்மை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 2026 ஆம் ஆண்டு உலக ஒவ்வாமை வாரமானது, ஜூன் 21 முதல் 27 வரை அனுசரிக்கப்படுகிறது.
    - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு Allergy Care is Essential Care என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்ட வடிவமைப்பு குழு

- தமிழ்நாடு அரசு பாடத்திட்ட வடிவமைப்பு குழுவை திருத்தியமைத்து, அதன் புதிய தலைவராக மயில்சாமி அண்ணாதுரையை நியமித்துள்ளது.
- மயில்சாமி அண்ணாதுரை சுல்தான் அகமது இஸ்மாயிலுக்குப் பதிலாக நியமிக்கப் பட்டுள்ள அதே வேளையில் குழுவின் பிற உறுப்பினர்கள் அனைவரும் தக்க வைக்கப்

பட்டுள்ளனர்.

- மாநில பள்ளிப் பாடத்திட்டத்தின் திருத்தத்திற்கு வழிகாட்ட இக்குழுவிற்கு மூன்றாண்டு பதவிக்காலம் வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டின் பள்ளிப் பாடத்திட்ட சீரமைப்பின் ஒரு பகுதியாக இக்குழு முதலில் 2025 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.
- 1 முதல் 3 ஆம் வகுப்புகளுக்கு புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையிலான பாடப் புத்தகங்கள் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என்பதோடு மேலும் உயர் வகுப்புகளுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.




## தமிழ்நாட்டில் VB-G RAM G திட்டம்




- விக்சித் பாரத் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார உத்தரவாத ஊரக இயக்கத் (VB-G RAM G) திட்டத்தை 2026 ஆம் ஆண்டு ஜூலை 1 முதல் செயல்படுத்துவதற்கான அறிவிப்பை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.

- ₹12,642 கோடி மதிப்பிலான இத்திட்டத்திற்கு 60:40 என்ற விகிதத்தில் நிதியளிக்கப் படுகிறது என்பதுடன் இதில் மத்திய அரசு ₹7,585 கோடியும், மாநில அரசு ₹5,057 கோடியும் பங்களிக்கின்றன.
- திறன்சாரா உடல் உழைப்பை மேற்கொள்ள விரும்பும் ஊரகக் குடும்பங்களுக்கு ஒரு நிதியாண்டில் 125 நாட்கள் ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்புக்கு இத்திட்டம் உத்தரவாதம் அளிக்கிறது.
- இத்திட்டம் நீர்ப் பாதுகாப்பு, ஊரக உள்கட்டமைப்பு, வாழ்வாதார சொத்துக்கள் மற்றும் தீவிர வானிலை நிகழ்வுகளின் தாக்கத்தைக் குறைப்பதற்கான பணிகளில் கவனம் செலுத்துகிறது.
- மாநில ஊரக வேலைவாய்ப்பு உறுதி சபை மற்றும் வழிகாட்டுதல் குழு ஆகியவை இத்திட்டத்தின் செயல்பாட்டை மேற்பார்வையிட்டு கண்காணிக்கும்.

# தேசியச் செய்திகள்


## தேசிய போதைப்பொருள் கட்டுப்பாட்டுத் திட்டம் 2026




- புது தில்லியில் நடைபெற்ற போதைப்பொருள் தடுப்பு ஒருங்கிணைப்பு மையத்தின் (NCORD) 10வது உயர்மட்டக் கூட்டத்தில், போதைப்பொருள் கட்டுப்பாடு குறித்த தொலை நோக்கு ஆவணத்தை (2026-2029) மத்திய அரசு வெளியிட்டது.
- போதைப்பொருள் தடுப்புப் பிரிவு (NCB) ஏற்பாடு செய்திருந்த NCORD கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சரால் இந்த ஆவணம் வெளியிடப்பட்டது.
- இது கடத்தல் வலைப்பின்னல்களைக் கண்டறிதல், விநியோகச் சங்கிலிகளை சீர் குலைத்தல் மற்றும் போதைப்பொருள் சூழலியல் அமைப்புகளை அழித்தல் ஆகிய மூன்று முனை உத்தியை வழங்குகிறது.
- பல நிறுவனங்களின் ஒருங்கிணைந்த செயல்பாடுகள் மற்றும் நிதி ரீதியிலான சீர்குலைவு மூலம் முக்கிய போதைப்பொருள் கடத்தல் குழுக்களை செயலிழக்கச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஒருங்கிணைந்த நடவடிக்கைக்காக 40-க்கும் மேற்பட்ட அமைச்சகங்கள், மாநில அரசுகள் மற்றும் நிறுவனங்களை இத்திட்டம் ஒருங்கிணைக்கிறது.
- போதை மருந்துகள் மற்றும் மனதளவில் பாதிப்பை ஏற்படுத்தும் பொருட்கள் மீதான சட்டவிரோத கடத்தல் தடுப்பு சட்டம், 1988 இன் (PITNDPS Act, 1988) கீழான அமலாக்க நடவடிக்கைகளை இது வலுப்படுத்துகிறது.

## DISHA 2.0 - நீதிக்கான அணுகல்

- டிஜிட்டல் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான அமைப்புகள் மூலம் சட்ட உதவியை அணுகுவதை மேம்படுத்துவதற்காக DISHA 2.0 (நீதிக்கான முழுமையான அணுகலை உறுதிசெய்யும் புதுமையான தீர்வுகளை வடிவமைத்தல்) திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது சட்டம் மற்றும் நீதி அமைச்சகத்தின் நீதித் துறையால் 2026-2031 ஆம் ஆண்டு கால கட்டத்திற்கு ₹255 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் ஒரு மத்திய துறைத் திட்டம் ஆகும்.
- 2.37 கோடிக்கும் அதிகமான பயனாளிகளைச் சென்றடைந்த DISHA (2021-2026) திட்டத்தின் அடிப்படையில் இந்தப் புதிய திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.
- பொது சேவை மையங்கள் மூலம் சட்ட ஆலோசனை வழங்கும் Tele-Law, இலவச சட்ட சேவைகளை வழங்கும் 'நியாய பந்து' மற்றும் சட்ட எழுத்தறிவு மற்றும் விழிப்புணர்வுத் திட்டம் (LLLAP) ஆகியவை இதன் முக்கிய கூறுகளாகும்.
- சட்ட உதவி வழங்கலைக் கண்காணிப்பதற்கும் மற்றும் தரவு சார்ந்த ஆளுகைக்குமாக VIDHI-Sanjeevani என்ற புதிய டிஜிட்டல் தளம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.





## உணவு தானிய உரிமையில் மாற்றங்கள் - அந்தியோதயா அன்ன யோஜனா



- அந்தியோதயா அன்ன யோஜனா (AAY) பயனாளிகளுக்கான உணவு தானிய உரிமையை திருத்தியமைக்க, 2013 ஆம் ஆண்டின் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தில் (NFSA) திருத்தம் செய்ய அரசாங்கம் முன்மொழிந்துள்ளது.
- இது குடும்பம் சார்ந்த ஒதுக்கீட்டிற்குப் பதிலாக ஒரு நபருக்கு மாதம் 7 கிலோ என வழங்க முன்மொழிகிறது, அதே வேளையில் ஒரு குடும்பத்திற்கு அதிகபட்சமாக 35 கிலோ என்ற உச்ச வரம்பை தக்க வைத்துள்ளது.
- இந்த மாற்றம், குறிப்பாக AAY திட்டத்தின் கீழ் உள்ள பெரிய குடும்பங்களுக்கான தனி நபர் உணவு விநியோகத்தில் உள்ள ஏற்றத்தாழ்வைக் குறைப்பதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது உணவு தானிய விதிமுறைகளை இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபையின் (ICMR) ஊட்டச்சத்து வழிகாட்டுதல்களுடன் (ஒரு வயது வந்தவருக்கு மாதம் ~7.5 கிலோ தானியங்கள்) ஒருங்கிணைக்கிறது.
- AAY திட்டம் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மிகவும் ஏழ்மையான குடும்பங்களை உள்ளடக்கியது, அதே வேளையில் முன்னுரிமை குடும்பங்கள் (PHH) ஒரு நபருக்கு மாதம் 5 கிலோ மானிய விலையில் பெறுகின்றன.

# சர்வதேசச் செய்திகள்

## உலகளாவிய இரசாயனங்கள் கண்காணிப்புத் திட்டம் - UNEP-GEF




- உலகளவில் அபாயகரமான இரசாயனங்களின் கண்காணிப்பை வலுப்படுத்தச் செய்வதற்காக, ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) மற்றும் உலகளாவிய சுற்றுச்சூழல் வசதி (GEF) ஆகியவற்றால் உலகளாவிய இரசாயனங்கள் கண்காணிப்புத் திட்டம் (GCMP) தொடங்கப்பட்டுள்ளது.
- இது நீடித்த கரிம மாசுபடுத்திகளுக்கான (POPs) ஸ்டாக்ஹோம் உடன்படிக்கை மற்றும் பாதரசம் மீதான மினமாட்டா உடன்படிக்கை ஆகியவற்றின் மதிப்பீட்டிற்கு ஆதரவு அளிக்கிறது.
- வளரும் நாடுகளில் இரசாயன மாசுத் தரவு மற்றும் கொள்கை முடிவுகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட GCMP என்பது, சுமார் 50 மில்லியன் அமெரிக்க டாலர் கூட்டு நிதியுதவியுடன் கூடிய 23.5 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான ஒரு முயற்சியாகும்.
- அறிவியல் பூர்வமான ஆதாரங்களை உருவாக்குவதற்கும், கண்காணிப்பு அமைப்புகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் இரசாயனப் பாதுகாப்பு குறித்த

சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கும் இது ஆறு திட்டங்களைச் செயல் படுத்தும்.

- ❖ POPs என்பவை சுற்றுச்சூழலில் நீண்ட காலம் நிலைத்திருந்து, உணவுச் சங்கிலிகளில் உயிர்த்திரட்சி அடையும் நச்சு இரசாயனங்கள் ஆகும்; அதே நேரத்தில் பாதரசம் என்பது நரம்பு, செரிமானம் மற்றும் நோய் எதிர்ப்பு அமைப்புகளைப் பாதிக்கும் ஒரு நச்சுத் தனிமமாகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## சிஸ்தான் மண் பாம்பு இனம்




- ❖ ஒரு புதிய ஊர்வனவியல் ஆய்வானது, இந்தியாவில் சிஸ்தான் மண் பாம்பின் (எரிக்ஸ் சிஸ்டனென்சிஸ்) முதல் உறுதிப்படுத்தப்பட்ட பதிவைப் புகாரளித்துள்ளது.
- ❖ இந்த இனம் இந்தியாவின் ராஜஸ்தானில் உள்ள வட தார் பாலைவனப் பகுதியில் ஆவணப் படுத்தப் பட்டுள்ளது.
- ❖ சிஸ்தான் மண் பாம்பு என்பது சிறிய, விஷமற்ற, மண்ணுக்குள் வளை தோண்டி வாழும் ஒரு பாம்பு இனமாகும்.
- ❖ இது இதற்கு முன்பு ஈரான் மற்றும் பாகிஸ்தானில் மட்டுமே அறியப்பட்டிருந்தது, தற்போது இந்தியாவில் இதன் இருப்பு முதன்முறையாக உறுதி செய்யப்பட்டுள்ளது.
- ❖ இந்த கண்டுபிடிப்பின் மூலம், இந்தியா தற்போது செம்மண் பாம்பு, சொரசொரப்பான செதில் கொண்ட மண் பாம்பு, விட்டேக்கரின் மண் பாம்பு மற்றும் சிஸ்தான் மண் பாம்பு ஆகிய நான்கு மண் பாம்பு இனங்களைக் கொண்டுள்ளது.
- ❖ இந்த இனம் இந்தியாவில் வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம், 1972 இன் அட்டவணை II-இன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளது.

## கழுகுகள் மறு அறிமுகத் திட்டத்தில் பின்னடைவு

- ❖ தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டம், எபநாடு அருகே மின்சாரக் கம்பியில் மோதியதில், ரேடியோ அலைக்கற்றை மூலம் கண்காணிக்கப்படும் வெண்முதுகுப் பாறுக்கழுகு ஒன்று மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்தது.
- ❖ காப்பகத்தில் வளர்க்கப்பட்ட இந்தப் பறவை, மறுஅறிமுகத் திட்டத்தின் ஒரு பகுதியாக

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் முதுமலை புலிகள் காப்பகத்தில் விடுவிக்கப் பட்டது.

- இந்தக் கழுகு முதுமலைக்கு மாற்றப் படுவதற்கு முன்பு, 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மகாராஷ்டிராவின் தடோபா-அந்தாரி புலிகள் காப்பகத்தில் விடுவிக்கப் பட்டிருந்தது.
- வெண்முதுகுப் பாறு தெற்காசியாவிற்கு மட்டுமே உரித்தானது என்பதுடன் இது இயற்கைப் பாதுகாப்பிற்கான சர்வதேச ஒன்றியத்தின் (IUCN) செந்நிறப் பட்டியலில் மிக அருகி வரும் இனம் எனப் பட்டியலிடப்பட்டுள்ளது என்பதோடு மேலும் வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம், 1972 இன் அட்டவணை I-இன் கீழ் பாதுகாக்கப்படுகிறது.
- கால்நடைகளுக்குப் பயன்படுத்தப்படும் டைக்ளோஃபெனாக் என்ற மருந்தினால் ஏற்பட்ட நச்சுத் தன்மை காரணமாக இதன் எண்ணிக்கை கடுமையாகச் சரிந்தது என்பதுடன் இம்மருந்து செலுத்தப்பட்ட கால்நடைகளின் உடல்களை உண்ணும் கழுகுகளுக்கு இது சிறுநீரகச் செயலிழப்பை ஏற்படுத்துகிறது.



**Radio-tagged vulture electrocuted in Nilgiris**

A radio-tagged white-rumped vulture relocated from Maharashtra to the Mudumalai Tiger Reserve as part of a conservation initiative died after being electrocuted by an overhead power line in the Nilgiris. The captive-bred scavenger was struggling to settle in its new habitat and repeatedly ventured into surrounding areas.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## கவிஞர் புவியரசு மறைவு

- இரண்டு முறை சாகித்ய அகாடமி விருது பெற்ற தமிழ் கவிஞர் புவியரசு (இயற்பெயர்: எஸ். ஜெகநாதன்) தனது 96வது வயதில் காலமானார்.
- திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை அருகே உள்ள லிங்கவநாயக்கன்புதூரில் 1931 ஆம் ஆண்டில் பிறந்த அவர், வானம்பாடி இலக்கிய இயக்கத்தின் நிறுவனர்களில் ஒருவராவார் என்பதுடன் மேலும் 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஆசிரியராகப் பணி ஆற்றினார்.
- இவர் 80க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார் மற்றும் வில்லியம் ஷேக்ஸ்பியர்,

கலீல் ஜிப்ரான், ரவீந்திரநாத் தாகூர், ஃபியோடர் தஸ்தயேவ்ஸ்கி ஆகியோரின் படைப்புகளை தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

- ❖ காசி நஸ்ருல் இஸ்லாமின் கவிதைகளின் மொழிபெயர்ப்பான 'புரட்சிக்காரன்' நூலுக்காக சாகித்ய அகாடமி மொழிபெயர்ப்பு விருதையும் (2006), அவரது 'கையொப்பம்' கவிதைத் தொகுப்பிற்காக சாகித்ய அகாடமி விருதையும் (2009) பெற்றார்.
- ❖ இவரது குறிப்பிடத்தக்கப் படைப்புகளில் கையொப்பம், முக்கூடல், புரட்சிக்காரன் மற்றும் மீறல் ஆகியவை அடங்கும்; 'முக்கூடல்' நூல் தமிழக அரசின் சிறந்த புதுக் கவிதை நூலுக்கான விருதை வென்றது.




## முக்கிய தினங்கள்

### ஜிஎஸ்டி தினம் 2026 - ஜூலை 01




- ❖ சரக்கு மற்றும் சேவை வரியானது (GST) 2017 ஆம் ஆண்டு ஜூலை 1 அன்று தொடங்கப் பட்டதைக் குறிக்கும் வகையில், 2026 ஆம் ஆண்டு ஜூலை 1 அன்று 9 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

- ஜிஎஸ்டி 17 மறைமுக வரிகள் மற்றும் 13 உபவரிகளை ஓர் ஒருங்கிணைந்த வரிக் கட்டமைப்பின் மூலம் மாற்றி, "ஒரே நாடு, ஒரே வரி" என்ற முறையை அறிமுகப் படுத்தியது.
- ஜிஎஸ்டி என்பது சரக்குகள் மற்றும் சேவைகளின் விநியோகத்தின் மீதான இலக்கு அடிப்படையிலான ஒரு மறைமுக வரியாகும் என்பதோடு இது மத்திய ஜிஎஸ்டி (CGST), மாநில ஜிஎஸ்டி (SGST) மற்றும் ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி (IGST) ஆகியவற்றின் மூலம் நிர்வகிக்கப் படுகிறது.
- ஜிஎஸ்டி குழுமமானது ஜிஎஸ்டி கொள்கையை வழி நடத்துகிறது மற்றும் மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையிலான கூட்டுறவு கூட்டாட்சியை ஊக்குவிக்கிறது.
- 2017 ஆம் ஆண்டில் 66.5 லட்சமாக இருந்த ஜிஎஸ்டி வரி செலுத்துவோரின் எண்ணிக்கை, 2026 ஆம் ஆண்டு மே மாத நிலவரப்படி சுமார் 1.65 கோடியாக உயர்ந்துள்ளது என்பதோடு இது பொருளாதாரத்தின் அதிகப்படியான முறைப்படுத்தலை மிக நன்கு பிரதிபலிக்கிறது.

## சர்வதேச வெப்பமண்டல தினம் 2026 – ஜூன் 29




- வெப்பமண்டலப் பகுதிகளின் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்துவதற்காக இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த அனுசரிப்பு 2016 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் (UNGA) நிறுவப் பட்டது.
- வெப்பமண்டலப் பகுதிகள் கடக ரேகை மற்றும் மகர ரேகைக்கு இடையே அமைந்து உள்ளன என்பதுடன் மேலும் இவை ஆசியா, ஆப்பிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா மற்றும் பசிபிக் பகுதிகளை உள்ளடக்கியுள்ளன.
- இப்பகுதி பூமியின் மேற்பரப்பில் சுமார் 40%-ஐ உள்ளடக்கியது மற்றும் உலகளாவியப் பல்லுயிர்ப் பெருக்கத்தில் கிட்டத்தட்ட 80%-ஐக் கொண்டுள்ளது.
- இந்த தினம் வெப்பமண்டலப் பகுதிகளில் பருவநிலை மாற்றம், பல்லுயிர்ப் பாதுகாப்பு மற்றும் நிலையான வளர்ச்சி ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★